DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 69/2014 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 7 |
| | |
| Name | செந்தில்குமார் |
| Father / Husband Name | ராமச்சந்திரன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 23rd August 2022.

-----------------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

1) நான் சிவகங்கை செந்தமிழ் நகரில் குடியிருந்து வருகிறேன். கார்பெண்டராக பணிபுரிந்து வருகிறேன். 29.09.2012ம் தேதி மாலை 6.30 மணியளவில் சோழபுரம் பேருந்து நிலையம் அருகில் இ.பியில் வேலை செய்து வரும் ராதாகிருஷ்ணன் என்பவரும், நானும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். சிவகங்கை நகர் காவல்நிலையத்திலிருந்து போலீஸ் வந்தார்கள். விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைந்தார்கள். அவர்கள் பார்த்து வரைந்ததற்கு சாட்சி கையொப்பம் செய்யச் சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எங்கள் முன்பு தான் பேருந்து நிலையம் அருகில் வைத்து தயார் செய்தார்கள். அ.சா.ஆ.2 பார்வை மகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் சேர்ந்து ராதாகிருஷ்ணன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1) நான் 21 வருடமாக பெங்களூரில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போனவர் எனது பெரியம்மா. சோழபுரம் பஸ்ஸ்டாப்பில் கிழக்கு பக்கமும், மேற்கு பக்கமும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சி அ.சா.5

ராதாகிருஷ்ணன் எனது நண்பர். இறந்து போன எனது பெரியம்மாவிற்கு 75 வயது இருக்கும். இந்த வழக்கில் யார் புகார் கொடுத்தார் என்று தெரியாது.

2) அ.சா.1 எனது இறந்த பெரியம்மாவின் மகன். ஒரு பக்கத்தில் போலீசார் படம் வரைந்தார்கள். மற்றொரு பக்கத்தில் எழுதினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். போலீசார் வந்தார் எந்த நிலை காவலர் என்று தெரியாது. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும், அ.சா.1 எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 23.08.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.